புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 PRGI.No.PNTAM/26/A7529 GSTIN: 33KXSPK6994Q1ZX

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com
ஆசிரியர்: K.சபியுல்லா

மலர்: 02 | இதழ்: 89 | 04-10-2026 | ஞாயிறு | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி

Volum 02 | Issue: 89 | 04-10-2026 | Sunday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## “எப்ஐஆர் முதல் உச்ச நீதிமன்றம் வரை 3 ஆண்டுகளில் வழக்குகளுக்கு தீர்வு” அமித் ஷா



போபால்: அக்.4

பாரதிய நியாய சன்ஹிதா முழுமையாக அமல்படுத்தப்பட்டதும், முதல் தகவல் அறிக்கை நிலை முதல் உச்ச நீதிமன்றம் வரையில் வழக்குகள் மூன்று ஆண்டுகளுக்குள் தீர்க்கப்படும் என்று அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மத்தியப் பிரதேச தலைநகர் போபாலில், பாரதிய நியாய சன்ஹிதா குறித்த கண்காட்சி மற்றும் மாநில அளவிலான கால்நடை வளர்ப்போர் மாநாடு ஆகியவை நடைபெற்றன. இதில் கலந்து கொண்டு கண்காட்சியை தொடங்கிவைத்த உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா, கால்நடை வளர்ப்போர் மத்தியில் உரையாற்றினார்.

அப்போது அவர், “ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட சட்டங்கள் அவர்களின் அரசாங்கத்தையும் ஆட்சியையும் பாதுகாக்கக் கொண்டுவரப்பட்டவை. இந்திய குடிமக்களின் கண்ணியத்தைப் பாதுகாக்கவே புதிய குற்றவியல் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படைத் தத்துவம் நீதி வழங்குவதே தவிர, தண்டனை அளிப்பது அல்ல. குற்றம் செய்பவர்களைத் தடுக்க அவசியமான இடங்களில் மட்டுமே தண்டனை வழங்கப்படுகிறது.

புதிய குற்றவியல் சட்டம் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு முழுமையாக அமல்படுத்தப்படும். அதன்பிறகு, முதல் தகவல் அறிக்கை (எப்ஐஆர்) பதிவு செய்வது முதல் உச்ச நீதிமன்றம் வரை வழக்குகள் மூன்று ஆண்டுகளுக்குள் தீர்த்துவைக்கப்படும்.

நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்தே விவசாயிகளும், கூட்டுறவுத் துறையுடன் தொடர்புடையவர்களும் தனி கூட்டுறவு அமைச்சகம் வேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர். எனினும், காங்கிரஸ் கட்சி 75 ஆண்டுகளாக இதை அனுமதிக்கவில்லை. பிரதமர் நரேந்திர மோடி பொறுப்பேற்ற பிறகே கூட்டுறவுத் துறைக்கென தனி அமைச்சகத்தை உருவாக்கினார்.

கூட்டுறவு அமைச்சகத்தால் அதிகம் பலனடைந்து வருபவர்கள் கால்நடை வளர்ப்பவர்களே. 2014 15ல் இந்தியாவின் மொத்த பால் உற்பத்தி 14.7 கோடி டன்னாக இருந்தது. 75 ஆண்டுகளில் அது 14.7 கோடி டன்னை மட்டுமே எட்டி இருந்தது. ஆனால், மோடியின் 10 ஆண்டுகால ஆட்சியில் அது 25 கோடி டன்னாக உயர்ந்துள்ளது.

மாட்டு இனங்களை மேம்படுத்தவும், அவை நோய்த்தொற்றுக்கு ஆளாகாமல் இருப்பதை உறுதி செய்யவும் நவீன தொழில்நுட்பங்கள் மூலம் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2047ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதிக்குள் ஒவ்வொரு துறையிலும் இந்தியா உலகிலேயே முதலிடத்தைப் பிடிக்கும் என்று மோடி உறுதிமொழி எடுத்துள்ளார். நாட்டு மக்களையும் அவ்வாறே உறுதிமொழி ஏற்கச் செய்துள்ளார்” என தெரிவித்தார்.

## “விடுபட்ட வாக்காளர்களுக்கு ‘படிவம் 6’ வாய்ப்பை மறைத்தது ஏன்?” ப.சிதம்பரம் கேள்வி



புது டெல்லி: மேற்கு வங்கத்தில் எஸ்ஐஆர் பணியின் போது வாக்காளர்கள் நீக்கப்பட்ட நடைமுறை குறித்து மூத்த காங்கிரஸ் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ப. சிதம்பரம் கேள்வி எழுப்பியுள்ளார். அத்துடன், விடுபட்டவர்களை மீண்டும் சேர்ப்பதற்கான நிதிச் செலவுகள் மற்றும் பொறுப்புக்கூறல் குறித்தும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து ப.சிதம்பரம் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “எஸ்ஐஆர் நடவடிக்கையின் போது விடுபட்ட வாக்காளர்கள் ‘படிவம் 6’ஐ பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலம் எளிதாக மறுபதிவு செய்ய முடியும் என்றால், மேற்கு வங்கத்தின் எஸ்ஐஆர் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டபோது இந்த விஷயம் ஏன் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை?

முறையான நடைமுறைகளைப் பின்பற்றாமல் மேற்கு வங்கத்தில் லட்சக் கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. மேல்முறையீடுகளை விசாரிக்கத் தீர்ப்பாயங்களை அமைக்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது; அதன்படி லட்சக்கணக்கான மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டன.

நீதிபதிகள் ஆறு மாத காலம் கடுமையாக உழைத்து, சுமார் 1,26,000 மேல்முறையீடுகள் மீதான நடவடிக்கைகளை முடித்தனர். இதில் 91 முதல் 93 சதவீத மேல்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வாக்காளர் பட்டியலில் பெயர்கள் மீண்டும் சேர்க்கப்பட்டன. இவையெல்லாம் வீணான முயற்சியா?

‘படிவம் 6’ ஐ சமர்ப்பிப்பதன் மூலம் எளிதாக மறுபதிவு செய்ய முடியும் என்றால், மேற்கு வங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட அந்த நடவடிக்கைகள் அனைத்தும் நேரத்தையும் பணத்தையும் வீணடித்த செயலாகவே தோன்றுகிறது.

13.30 கோடி பெயர்களை நீக்குவதற்கு கோடிக்கணக்கான ரூபாய் செலவிடப்பட்டது; இப்போது விடுபட்ட வாக்காளர்களை மீண்டும் பட்டியலில் சேர்ப்பதற்கும் கோடிக்கணக்கான ரூபாய் செலவிடப்படவுள்ளது. இதற்கு யார் பொறுப்பு?” எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

## தலைவர்கள் தீவிர ஓட்டு வேட்டை.. !...

# மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் இன்று ஓய்கிறது பிரசாரம்:



சென்னை, அக்.4–

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகளுக்கு 6ந்தேதி இடைத்தேர்தல் நடக்கிறது. இந்த தேர்தலில் 5 முனை போட்டி நிலவுகிறது. 2 தொகுதிகளிலும் தலைவர்கள் முகாமிட்டு தீவிர தேர்தல் பிரசாரம் செய்து வருகின்றனர். இன்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியுடன் தேர்தல் பிரசாரம் ஓய்கிறது..விஜய், மு.க.ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமிஇந்தநிலையில் முதல் அமைச்சர் விஜய், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் நேற்று ஒரே நாளில் ‘ரோடு ஷோ’ மூலம் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டனர். மதுராந்தகம் தொகுதியில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர் மரகதம் குமரவேலை ஆதரித்து முதல் அமைச்சர் விஜய் நேற்று ரோடுஷோ நடத்தினார். இதற்காக நீலாங்கரை இல்லத்தில் இருந்து மதியம் 1 மணிக்கு காரில் புறப்பட்ட அவருக்கு வழியெங்கும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. சாலையின் இரு பக்கத்திலும் திரண்டிருந்த தொண்டர்கள் விஜய் பயணித்த கார் மீது பூக்களை தூவி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். மாமண்டூர் சந்திப்பில் இருந்து 2.30 மணிக்கு முதல்அமைச்சர் விஜய், ‘ரோடு ஷோ’வை தொடங்கினார். திறந்தவெளி வேனில் நின்றபடி மக்களிடையே வாக்கு சேகரித்தார்..40 இடங்களில் வாக்குசேகரிப்பு தொடர்ந்து புக்கத்துரை சந்திப்பு, பழையனூர் சந்திப்பு, படாளம் சந்திப்பு பகுதியில் ஏராளமானோர் திரண்டு இருந்து அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.அங்கு பரிசு பொருட்களுடன் காத்திருந்த பொது மக்களுக்காக தனது வாகனத்தை நிறுத்திய முதல் அமைச்சர் விஜய், அவர்களின் பரிசுகளை அன்புடன் பெற்றுக்கொண்டார். அவருக்கு செங்கோல், சாமி சிலைகள், எம்.ஜி.ஆர். அவரை ஆசிர்வதிப்பது போன்ற படங்கள்,வேல்,பூங்கொத்துகளை அவருக்கு வழங்கினர்.கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் திறந்தவெளி வாகனத்தில் பிரசாரம் மேற்கொண்ட முதல் அமைச்சர் விஜய்யை காண அலை, அலையாய் மக்கள் கூட்டம் திரண்டு வந்தது. அவர்களை பார்த்தும் விஜய் விசில் ஊதி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். ஜானகிபுரம், கருங்குழி, அய்யனார் கோவில் சந்திப்பு, மாம்பாக்கம், முதுகரை சந்திப்பு, மேல்மருவத்தூர் கோவில் சந்திப்பு, சரவம்பாக்கம் சந்திப்பு, கீழ் அத்திவாக்கம், எலப்பாக்கம், மேளச்சேரி, தண்டலம் உள்பட 40 இடங்களில் அவர் வாக்கு சேகரித்தார்..எல்.எண்டத்தூரில் தனது வாகனத்தை நிறுத்தி கீழே இறங்கிய அவர், அங்கிருந்த டீக்கடையில் டீ குடித்தார். அந்த ஊர் பெரியவர்களுடன் அமர்ந்து, சிறிது நேரம் உரையாடினார். டீக்கடைக்காரரிடம், ‘டீ நன்றாக இருக்கிறது’ என்று கூறினார்.கிளியாநகர் பகுதியில் வானத்தை நிறுத்தி கீழே இறங்கிய முதல் அமைச்சர் விஜய், அங்கு வயல்வெளியை ஆய்வு செய்தார். அந்த பகுதியில் நின்றிருந்த பெண்களிடம் விஜய் வாக்கு சேகரித்தார். செம்பூண்டி பகுதியில், மாற்று திறனாளிகளிடம் இருந்து கோரிக்கை மனுக்களையும் வாங்கிக்கொண்டார். .டிராக்டர் ஓட்டிய விஜய்ராமபுரம் பகுதியில் வயலில் உழவு பணி நடந்து கொண்டிருந்தது. இளைஞர் ஒருவர் டிராக்டர் ஓட்டி கொண்டிருந்தார். இதைபார்த்ததும் முதல் அமைச்சர் காரில் இருந்து இறங்கி வயலுக்கு சென்றார். முதல்அமைச்சரை பார்த்ததும் அந்த இளைஞர் டிராக்டரில் இருந்து இறங்கி வந்தார். அவரின் தோளில் தட்டி கொடுத்த விஜய், அந்த டிராக்டரில் ஏறி, டிராக்டர் ஓட்டினார்.ஆணைக்குன்னம் பகுதியில் காரில் இருந்து இறங்கி வீடு, வீடாக விஜய் வாக்கு சேகரித்தார். அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்தனர். இதனை புன்னகையுடன் ஏற்றுக்கொண்ட முதல் அமைச்சர் விஜய், தன்னை ஆரத்தி எடுத்தவர்களுக்கு ஆரத்தி எடுத்தார்.மதியம் 2.30 மணிக்கு தொடங்கி, 6.30 மணி வரை 4 மணி நேரம் வாகனத்தில் நின்று கொண்டே மக்களை அவர் சந்தித்தார். தேரடி தெருவில் அவர் தனது தேர்தல் பிரசாரத்தை நிறைவு செய்தார்..மு.க.ஸ்டாலின் ‘ரோடு ஷோ’திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் சுகன்யாவை ஆதரித்து, அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று தாராபுரம் அமராவதி சிலையில் இருந்து ரோடு ஷோ சென்று பிரசாரம் செய்தார்.தாராபுரம் பெரிய கடைவீதி, பூக்கடை வீதி உள்பட முக்கிய பகுதிகள் வழியாக சுமார் 2 கிலோமீட்டர் தூரம் வரை ரோடு ஷோ சென்றார். அவருக்கு வழிநெடுகிலும் தி.மு.க.வினர் மலர் தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர்.ரோடுஷோவின் நடுவே வாகனத்தில் இருந்து கீழே இறங்கிய மு.க.ஸ்டாலின், அங்கு கூடியிருந்த பொதுமக்களிடம் வாக்கு கேட்டார். தொண்டர்கள் வழங்கிய பரிசுகளையும் பெற்றுக்கொண்டார். அப்போது, தொண்டர்கள் கையில் வைத்திருந்த பலூன்களை மு.க.ஸ்டாலினை நோக்கி வீசியதால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது..கடந்த 3 மாதங்களாக’ரோடு ஷோ’ சென்றபோது வழியில் இறங்கிய மு.க.ஸ்டாலின் திடீரென வாகனத்தில் இருந்து கீழே இறங்கினார். பின்னர் அங்கிருந்த மளிகைக்கடைக்கு சென்றார். அவர், மளிகைக்கடைக்காரரிடம் விலைவாசி குறித்து கேட்டறிந்தார். அப்போது மு.க.ஸ்டாலின் கூறுகையில், 4 மாதங்களுக்கு முன்பு இருந்த விலையில் இருந்து அத்தியாவசிய பொருட்களின் விலை பெருமளவு உயர்ந்துள்ளது. அன்றாட சமையலுக்கு வீடுகளில் வசிக்கும் பொதுமக்கள் விழி பிதுங்கி நிற்கின்றனர். ‘ரீல்ஸ்’ பார்த்தால் மக்களின் வயிறு நிறையுமா?. இந்தியா முழுவதும் ஜி.எஸ்.டி. வருவாய் உயர்ந்து வரும் நிலையில், கடந்த 3 மாதங்களாக தமிழ்நாடு சரிவை சந்தித்து வருகிறது என்றார்..எடப்பாடி பழனிசாமிதாராபுரம் தொகுதி அ.தி.மு.க வேட்பாளர் பானுமதிக்கு ஆதரவு திரட்டுவதற்காக கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று தீவிர பிரசாரம் செய்தார். இரவு 8 மணி அளவில் தாராபுரத்தில் உள்ள அ.தி.மு.க. தேர்தல் பணிமனை அலுவலகத்தில் இருந்து வாகனத்தில் ரோடுஷோ சென்றார்.உடுமலை சாலையில் இருந்து அலங்கியம் சாலை வழியாக தாராபுரம் நகர் முழுவதும் ரோடுஷோ சென்ற அவருக்கு வழி நெடுகிலும் காத்திருந்த தொண்டர்கள் பூக்கள் தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர். மேலும் ஒருசிலர் செல்பியும் எடுத்துக் கொண்டனர். தாராபுரம் அண்ணா சிலை அருகே ரோடுஷோ நிறைவடைந்தது. இதையடுத்து அங்கு பொதுக் கூட்டம் நடந்தது. இதில், எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டு பேசினார்.”

# “தமிழகத்தில் பொருளாதார நெருக்கடிக்கு வாய்ப்பு”

## புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி எச்சரிக்கை



சென்னை: அக்.4

“தமிழகத்தில் மிகப் பெரிய அளவுக்குப் பணப்புழக்கம் குறைந்து, பொருளாதார நெருக்கடி ஏற்பட வாய்ப்பு உள்ளது” என புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “விஜய் அரசு பொறுப்பேற்று 5 மாதங்கள் நிறைவடைய உள்ளன. பூரண மதுவிலக்கு, ஊழலற்ற ஆட்சி போன்ற எண்ணற்ற வரக்குறுதிகளை அள்ளித் தெளித்து ஆட்சிக்கு வந்துள்ள விஜய் அரசு, எந்த வாக்குறுதியையும் நிறைவேற்ற முடியாமல் தள்ளாடுகிறது.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் முதல், முதல்வர் வரை நிர்வாக அனுபவமின்மை, அரசின் பல செயல்பாடுகளிலும் வெளிப்படுகிறது. தினசரி நடைபெறக்கூடிய கொலைச் சம்பவங்கள், சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள், மக்களின் போராட்டங்கள் ஒருபுறம்; மறுபுறம் தொடர் மின்வெட்டு, சிறுகுறு தொழில் முதல் பெரிய நிறுவனங்கள் வரையிலும் சுய மின் உற்பத்தி மூலம் மட்டுமே செயல்படும் அவல நிலை என ஒட்டுமொத்தத்தில் எல்லா குறைபாடுகளும் ஒருங்கிணைந்து, பொருளாதார வளர்ச்சியை முடக்கிப் போட ஆரம்பித்துவிட்டது.

கடந்த ஆண்டு ஜூலை முதல் செப்டம்பர் வரை வரி வருவாயை ஒப்பிடுகையில், இந்த ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் ஜிஎஸ்டி வரி வருமானம் ஒரு சதவீதமும், செப்டம்பரில் 5 சதவீதமும் குறைந்துள்ளது.

அதேநேரத்தில் பல மாநிலங்களில் வருவாய் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இது இப்படியே போனால், மிகப்பெரிய அளவுக்குப் பணப்புழக்கம் குறைந்து, பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்படலாம். பலருக்கும் வேலைவாய்ப்புகளும் பறிபோகக் கூடும்.

தமிழகத்தில் வரி வருவாய் குறைந்து வருகிறது என்றாலே பிற வருவாய்களும் தானாகவே குறையும். எனவே, தமிழகத்தில் அரசியல், பொருளாதார, சமூகப் பிரளயங்களை விரைவில் நாம் எதிர்கொள்ள நேரிடும்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

## கதர் கிராமத் தொழில் வாரியத்தில் காந்தியடிகள்158 வது பிறந்த நாள் விழா மற்றும் கதர் விற்பனை துவக்க விழா



கோவை அக்:04

கோவை அவினாசி சாலையில் உள்ள கதர் அங்காடியில் மாவட்ட ஆட்சியர் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். நமது இந்திய நாடு பல ஆயிரம் கிராமங்களை உள்ளடக்கிய விவசாயிகள் அதிகம் வாழும் நாடாகும்.விவசாயத் தொழில் வருடத்தில் 6 மாதங்கள் மட்டுமே வேலைவாய்ப்பு அளிக்க வல்லது. மீதமுள்ள நாட்களில் உள்ளூரில் கிடைக்கக் கூடிய மூலப் பொருட்களைக் கொண்டு நூல் நூற்பு நெசவு மற்றும் சோப்பு தயாரித்தல், காலணிகள் தயாரித்தல், தச்சு மற்றும் கொல்லு தொழில் போன்ற இன்னும் பிற கிராமத் தொழில்களில் ஈடுபட்டு வருவாய் ஈட்டவும், குறிப்பாக கிராமப்புற பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்பு அளிக்கவும் அண்ணல் காந்தியடிகள் அறிமுகப் படுத்தப் பட்டதே இக்கதர் கிராமத் தொழில் திட்டங்கள் ஆகும்.

தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு கதர் இரகங்கள் விற்பனை செய்திட ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள் மருத்துவப் பணியாளர்கள் ,உள்ளாட்சி அமைப்பில் பணிபுரியும் பணியாளர்கள் ஆகியோருக்கு இத்துறையின் மூலம் 10 சம தவணைகளில் திரும்ப செலுத்தக்கூடிய வகையில் கதர் துணிகள் கடனாக வழங்கப்படுகிறது.

சிறப்புத் தள்ளுபடி சலுகைகளை பொது மக்களும் அரசு அலுவலர்களும் பயன்படுத்தி கொண்டு உழவுக்கு அடுத்தபடியாக நெசவுத் தொழிலில் உள்ள ஏழை எளிய கிராமப்புற மக்களுக்கு உதவிடும் பொருட்டும் அண்ணல் காந்தியடிகளின் கனவை நனவாக்க கதர் ரகங்களை அதிக அளவில் கொள்முதல் செய்து கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட பேராதரவு நல்கிடுமாறு அன்புடன் கேட்டு கொண்டார்.

## சேலம் கோட்டத்தில் 366 பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணம். தமிழக அரசின் வெற்றி பயணம் திட்டம் அமலுக்கு வந்தது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சென்னை, விழுப்புரம், சேலம், கும்பகோணம், கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய 7 கோட்டங்களில் இயக்கப்படும் 18,413 பேருந்துகளில் 12,692 பேருந்துகள் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. சேலம் கோட்டத்தில் சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய 4 மாவட்டங்களில் 366 சாதாரண கட்டண பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம். சேலம்தர்மபுரி, சேலம்ஈரோடு, சேலம் நாமக்கல், சேலம்மேட்டூர், சேலம் கள்ளக்குறிச்சி, சேலம்அரூர், சேலம் ராசிபுரம் உள்ளிட்ட வழித்தடங்கள் திட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்துக்கு செல்லும் பேருந்துகளிலும் இலவச பயணம் செய்யலாம். சேலம் புதிய பேருந்து நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

## ஹெல்த் டிஆர் நிறுவனத்தின் அறிமுக விழா



NWA நிறுவனர் எம்.மனோகரன் முன்னிலையில் லயன் ரவி ராஜா தலைமையில் கோவை ராம்நகர் பிரின்ஸ் தனியார் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் தேசிய செயல் செயலாளர் மற்றும் பன்னாட்டு லயன்ஸ் இயக்கம் மாவட்டம் 3242 சி ஜி எம் டி ஒருங்கிணைப்பாளர் எஸ் செந்தில்குமார் ஹெல்த் டாக்டர் நிறுவனத்தின் பொருட்களை அறிமுகம் செய்தார்.விழாவில் நிறுவனர் திரு ஆனந்த் கோவை சந்திரன் மதுரை ஞானசேகரன் ராமச்சந்திரன் மற்றும் முன்னணி நிர்வாகிகள் 100 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## திருச்சி இரயில் இருப்புப் பாதை காவல் நிலையம்



திருச்சி அக் 4:

திருச்சி இருப்பு பாதை இரயில் நிலையம் 02/10/26ம் தேதி சிறப்பு ரோந்து அலுவலக முதல் நிலைக் காவலர் 517 கண்ணதாசன், மற்றும் காவலர் 950 ரெங்க பாஷ்யம், 1560 ராஜ்குமார் ஆகியோர் சகிதம்

விழுப்புரம் இரயில் நிலையத்தில் இருந்து திருச்சி வரை, வண்டி எண். 12652 நிஜாமுதீன் இருந்து மதுரை (தமிழ்நாடு சம்பர் காந்தி ) வரை செல்லும்

வண்டியில் , ( திருச்சி நடைமேடை எண் 4, மணி 21.25) தமிழக அரசால் தடை செய்யப்பட்டுள்ள கஞ்சா , குட்கா, போன்ற போதைப் பொருட்களை ரயிலின் பயணம் செய்யும் பயணிகளின் உடைமைகளை சோதனை செய்ததில் பின்புறம் உள்ள பொது பெட்டியில் இருக்கைக்குக் அடியில் கேட்பாரற்று கிடந்த 1 சோல்டர் பேக் , மற்றும் முன்புற பொதுப் பெட்டியின் இருக்கைக்கு கீழ் 2 சாக்கு பை, இருந்ததை சோதனை செய்ததில் குட்கா பாக்கெட்டுகள் இருந்தன

மொத்த எடை 24 . கிலோ அவற்றை பறிமுதல் செய்து திருச்சி இருப்புப் பாதை காவல் நிலையம் வந்து நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டது.

# செஞ்சி வட்டம் கோணை ஊராட்சியில் நாட்டுநலப்பணித்திட்ட முகாம்



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் கல்வி மாவட்டம் செஞ்சி ராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி நாட்டு நல பணித்திட்ட அலுவலர் ஏழுமலை அவர்கள் தலைமையில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் செஞ்சி வட்டம் கோணை ஊராட்சியில் 26.9.2025 முதல் 2.10.2025 வரை ஏழு நாட்கள் சிறப்பு முகாம் நடத்தினர்.

சிறப்பு முகாம் துவக்க விழாவினை நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் ஏழுமலை வரவேற்க இராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ராமசாமி அவர்கள் தலைமை தாங்கினார். முன்னாள் அமைச்சரும் செஞ்சி சட்டமன்ற உறுப்பினருமான மாண்புமிகு கே எஸ் மஸ்தான் அவர்கள் முகாமை துவக்கி வைத்து பேருரையாற்றினார். செஞ்சி பேரூராட்சித் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், ஒன்றிய குழு தலைவர் விஜயகுமார், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, மாநில பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். விழுப்புரம் மாவட்டம முதன்மை கல்வி அலுவலர் திரு அறிவழகன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள் உடன் திண்டிவனம் கல்வி மாவட்ட அலுவலர் சுப்பிரமணியன், திண்டிவனம் பள்ளித் துணை ஆய்வாளர் விநாயகமூர்த்தி, விழுப்புரம் மாவட்ட நாட்டு நலப்பணித் திட்ட தொடர்பு அலுவலர்கள் பாலசுந்தரம் மற்றும் ராஜசேகரன், கோணை ஊராட்சி மன்ற தலைவர் பிருந்தா, ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் மல்லிகா சேகர், கோணை ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அறிவழகன், கோணை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரேவதி கணேசன், அப்பம்பட்டு நேஷனல் பள்ளி தாளாளர் அய்யாதுரை கோணை நாட்டாமை ஆறுமுகம், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மாணிக்கம், கோணை அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பெருமாள் மற்றும் கோணை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் கிளியோபாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். தூய்மை பணியோடு சிறப்பு முகாம் துவங்கியது.

இரண்டாம் நாள் நிகழ்வாக பள்ளி வளாக தூய்மைப்படுத்துதல் மற்றும் உயர்கல்வி வழிகாட்டு நிகழ்விற்கு நேஷனல் பள்ளி தாளாளர் அய்யாதுரை மற்றும் நாட்டாமை ஆறுமுகம் தலைமை தாங்க ராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர்கள் சுந்தரபாண்டியன் மற்றும் பாண்டியராஜன் ஆகியோர் உயர்கல்வி வழிகாட்டி குறித்து சிறப்புரை ஆற்றினார்கள் . சிறப்பு முகாமின் மூன்றாம் நாள் நிகழ்வில் போதைப்பொருள் விழிப்புணர்வு சைக்கிள் பேரணியை முன்னாள் அமைச்சரும் செஞ்சி சட்டமன்ற உறுப்பினருமான மாண்புமிகு கே எஸ் மஸ்தான் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். பேரணியில் செஞ்சி பேரூராட்சி தலைவர் ஒன்றிய குழு தலைவர் விஜயகுமார் செஞ்சி காவல் ஆய்வாளர் அண்ணாதுரை பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மாணிக்கம் கோணை ஊராட்சி மன்ற தலைவர் பிருந்தா பள்ளி தலைமை ஆசிரியர் ராமசாமி நேஷனல் பள்ளி தாளாளர் அய்யாதுரை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். போதை பொருள் விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ஏழுமலை தலைமையில் மாணவர்கள் விழிப்புணர்வு பதாகைகளோடு முக்கிய வீதிகள் வழியாக சென்று மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். சிறப்பு முகாமில் நான்காம் நாள் நிகழ்ச்சியாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு நெகிழி ஒழிப்பு மற்றும் மஞ்சப்பை விழிப்புணர்வு நிகழ்ச்சி தொழிலதிபர் சையது உஸ்மான் அவர்கள் தலைமை தாங்க மேல்ஒலக்கூர் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியரும் தேசிய பசுமை படை மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான பாலசுப்பிரமணியன் அவர்கள் விழிப்புணர்வு சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்வில் கோணை ஊராட்சி மன்ற தலைவர் பிருந்தா, சேரானூர் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் மல்லிகா சேகர், நேஷனல் பள்ளி தாளாளர் அய்யாதுரை, இராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர்கள் செந்தில்குமார், ஆனந்தராஜ், பிரகாஷ் மற்றும் ரஞ்சித் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஒவ்வொரு நாள் நிகழ்வையும் நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் ஏழுமலை ஒருங்கிணைத்து அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். சிறப்பு முகாமின் ஐந்தாம் நாள் நிகழ்ச்சியை முன்னாள் மாவட்ட கவுன்சிலர் சோழன் அவர்கள் தலைமை தாங்க அப்பம்பட்டு கால்நடை உதவி மருத்துவர் பிருந்தா அவர்களின் தலைமையில் கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது அதில் கிராமத்தில் உள்ள மக்கள் நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்களின் உதவி கொண்டு அவர்களுடைய ஆடு மாடு மற்றும் கோழிகளை அழைத்து வந்து சிகிச்சை பெற்றுச் சென்றனர். முகாமின் ஆறாம் நாள் நிகழ்ச்சியாக ஏரிக்கரையில் பனை விதைகள் மற்றும் மரக்கன்றுகளை நடும் விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக செஞ்சி பேரூராட்சி தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், செஞ்சி ஒன்றிய குழு தலைவர் விஜயகுமார் அவர்கள் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்கள். சுமார் 1000 பனை விதைகளையும் 500 மரக்கன்றுகளையும் நட்டு நாட்டு நல பணித்திட்ட மாணவர்கள் சாதனை புரிந்தனர். நிகழ்வில் கோணை ஊராட்சி மன்ற தலைவர் பிருந்தா துணைத் தலைவர் அறிவழகன் நேஷனல் பள்ளி தாளாளர் அய்யாதுரை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சிறப்பு முகாமின் ஏழாம் நாள் மற்றும் நிறைவு விழாவில் செஞ்சி பேரூராட்சி தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் அவர்கள் கலந்துகொண்டு மகாத்மா காந்தி படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து மாணவர்களின் செயலைப் பாராட்டி நினைவு பரிசு வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றியக்குழு தலைவர் விஜயகுமார் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மாணிக்கம், ஊராட்சி மன்ற தலைவர் பிருந்தா துணை தலைவர் அறிவழகன், கோணை அரசு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பெருமாள் ஊராட்சி ஒன்றிய பள்ளி தலைமை ஆசிரியர் கிளியோபாஸ், முன்னாள் கவுன்சிலர்கள், வார்டு உறுப்பினர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டு ஏழு நாள் சிறப்பு முகாமில் மாணவர்கள் செய்த பணிகளை பாராட்டினார்கள். நிறைவிழாவில் ஏழு நாட்கள் செய்த பணிகளை தொகுத்து நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் ஏழுமலை அவர்கள் அறிக்கையாக வாசித்தார். உதவி திட்ட அலுவலர் செந்தில்குமார் நன்றி தெரிவிக்க சிறப்பு முகாம் சிறப்பாக நிறைவு பெற்றது

## விசிக மாநில மாணவரணி துணைச் செயலாளராக சோ.திராவிட ராசா நியமனம்

கிருஷ்ணகிரியைச் சேர்ந்த சோ.திராவிட ராசா, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில மாணவரணி துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை அக்கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் வெளியிட்டுள்ளார்.



புதிய மாநில மாணவரணி துணைச் செயலாளராக பொறுப்பேற்றுள்ள சோ.திராவிட ராசா, கட்சியின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு, கட்சியின் கொள்கைகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பதுடன், மாணவரணி அமைப்பு பணிகளை மேலும் வலுப்படுத்துவார் என கட்சி நிர்வாகிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இந்த நியமனத்தைத் தொடர்ந்து கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சோ.திராவிட ராசாவுக்கு நேரிலும், தொலைபேசி வாயிலாகவும், சமூக வலைதளங்கள் மூலமும் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

மேலும், கட்சித் தலைமையின் நம்பிக்கையை நிறைவேற்றி, மாணவரணி பணிகளை சிறப்பாக மேற்கொண்டு கட்சியை மேலும் பலப்படுத்தும் வகையில் தீவிரமாக செயல்படுவேன் என்று சோ.திராவிட ராசா தெரிவித்துள்ளார்.

## அனல்மின் நிலையத்தில் மின் உற்பத்தி பாதிப்பு!!

திருவள்ளூர்: அக்.4–

திருவள்ளூர் மாவட்டம் வடசென்னை அனல்மின் நிலையத்தில் 600 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. வட சென்னை அனல் மின் நிலையத்தில் 2வது நிலையின் 1ஆவது அலகில் கொதிகலன் கசிவால் மின் உற்பத்திபாதிப்பு ஏற்பட்டுள்ளது, தமிழ்நாட்டில் ஏற்கனவே மின்தடை பிரச்சனை உள்ள நிலையில் 600மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கோடை வெப்பம் நீடிக்கும் நிலையில் மின் தேவையும் அதிகமாகி உள்ள நிலையில் இந்த மின் உற்பத்தி பிரச்னை ஏற்பட்டுயுள்ளது.

## நடுப்பையூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் நிறைவு விழா!



கிருஷ்ணகிரி. அக்.4–

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் அடுத்த நடுப்பையூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 2.10.2026 வெள்ளிக்கிழமை நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் நிறைவு விழா நடைபெற்றது.

இந்த நிறைவு விழாவிற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் கோ. சுகுமார் தலைமை வகித்தார். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் சி. வேல், முதுகலை ஆசிரியர் வரவேற்புரை நல்கினார். மேலும், காந்தி உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த சிறப்பு முகாமில் மரக்கன்றுகள் நடுதல், பள்ளி சுற்றுப்புறத் தூய்மை, பனை விதை பதித்தல், சுகாதாரத் தூய்மை, ஊ.ஒ.தொ. பள்ளி நடுப்பையூர் பள்ளி வளாகத் தூய்மை, போதைப்பொருள், காசநோய் மற்றும் டெங்கு விழிப்புணர்வு, உடற்பயிற்சி மற்றும் யோகா, பையூர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் களப்பயணம், நிறைவு நாளில் மரக்கன்றுகள் நடுதல் போன்ற பல்வேறு செயல்பாடுகள் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களால் 26.9.2026 முதல் 2.10.2026 வரையுள்ள ஏழு நாட்களில் மேற்கொள்ளப்பட்டன.

இந்த சிறப்பு முகாமில் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் மற்றும் பொறுப்பாளர்கள், முன்னாள் பள்ளி மேலாண்மை குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள், பள்ளியின் இருபால் ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், பொதுமக்கள் மற்றும் 25க்கும் மேற்பட்ட நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

விழாவின் இறுதியில் அ. சின்னசாமி, முதுகலை ஆசிரியர் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட உதவி அலுவலர் நன்றியுரை யாற்றினார்.

# திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு 24X7 இயங்கும் கட்டுப்பாட்டு அறை மாவட்ட ஆட்சியர் ச.கவிதா நேரில் ஆய்வு





திருவள்ளூர் அக் 04 : திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் வடகிழக்கு பருவமழை2026 முன்னிட்டு 24X7 இயங்கும் கட்டுப்பாட்டு அறையை மாவட்ட ஆட்சியர் ச.கவிதா நேரில் ஆய்வு மேற்கொண்டு, மழை வெள்ளம் தொடர்பான புகார்களை பதியும் பதிவேடு மற்றும் தொலைபேசி எண்கள் தொடர்பாக கேட்டறிந்து பேசினார்.

வடகிழக்கு பருவமழை 2026ன் காரணமாக பொதுமக்கள் மழை, வெள்ளம் தொடா;பாக தங்கள் புகார்களை தெரிவிக்க மாவட்ட அவசர கால கட்டுப்பாட்டு அறைக்கான கட்டணமில்லா தொலைபேசி எண்.1077 இருபத்தி நான்கு மணி நேரமும் (24 X 7) இயங்கி வருகின்றது. மேலும், கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்கள். 044 27664177, 044 27666746, 04427660035, 044 27660036 க்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.

மேலும், வாட்ஸ்அப் எண்கள். 9444317862 / 9498901077 ஆகியவை மூலமும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தெரிவித்தார்.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் கே.வி.ராஜ்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) பி.பவித்ரா, உதவி இயக்குநர் (பயிற்சி) கே.சாகித்யா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், அலுவலக மேலாளர் (பொது) வெங்கடேஷ், வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) ரஜினிகாந்த் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சேலம் கோ ஆப்டெக்ஸ் தங்கம் பட்டு மாளிகையில் தீபாவளி பண்டிகை சிறப்பு தள்ளுபடி விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத், தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் கோ ஆப்டெக்ஸ் பொது லோளர் பிரேம்குமர், மண்டல மேலாளர் துரைமுருகன், துணை மண்டல மேலாளர் மாலதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# செஞ்சி பீரங்கிமேடு அருணாச்சலேஸ்வரர் கோவிலில் உள்ள வெங்கடேச பெருமாள் சன்னதியில் புரட்டாசி 3ம் சனிக்கிழமை சிறப்பு வழிபாடு

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி பீரங்கிமேடு அருணாச்சலேஸ்வரர் கோவிலில் உள்ள வெங்கடேச பெருமாள் கோவிலில் புரட்டாசி 3ம் சனிக்கிழமையை முன்னிட்டு சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

முன்னதாக அருணா சலேஸ் வரருக்கும் அபித குஜலாம்பாள் அம்பிகைக் கும் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்து அருணாச்சலேஸ்வரர் கோவிலில் இருந்து பட்டு வஸ்திரம் பூமாலைகள் திருப்பதி லட்டு பலகார வகைகள் பழ வகைகள் சீர்வரிசையாக மேள தாளம் முழங்க வெங்கடேச பெருமாள் சன்னதிக்கு எடுத்து வரப்பட்டு வெங்கடேச பெருமாளுக்கு சிறப்பு திருமஞ்சனம், சிறப்பு அபிஷேகம் மற்றும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.



தொடர்ந்து பட்டு வஸ்திரம் மற்றும் பல்வேறு வண்ண மலர் களைக் கொண்டு சுவா மிக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, பலவித பழ வகைகள் மற்றும் திருப்பதி லட்டு உள்ளிட்ட பிரசாதங்கள் வைத்து மகா தீபாராதனை காண்பிக்கப் பட்டது. இந்த சிறப்பு வழிபாட்டில் செஞ்சி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

தொடர்ந்து அன்ன தானம் வழங்கப்பட்டது.



புதுக்கோட்டை கிழக்கு மாவட்டம் மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட பொதுக்குழு அறந்தாங்கியில் அமைப்பு தேர்தல் தேர்தல் அதிகாரி சிவகாசி இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது. மமக தலைமை நிலைய செயலாளர் வழக்கறிஞர் ஜைனுல் ஆபிதீன் பொதுக்குழுவில் தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகளை அறிமுகம் செய்து வாழ்த்தி பேசினார். பொதுக்குழுவில் மாவட்ட தலைவர் ப.சேக் தாவூதீன், மாவட்ட செயலாளராக எம்எஸ்கே முகமது சாலிக், தமுமுக மாவட்ட செயலாளர் எம்.அக்பர் அலி, பொருளாளராக என்.நூர் முகமது, மாவட்ட துணைத் தலைவராக பைசல் அஹமது, துணைச் செயலாளராக அஜ்மல் கான், இப்ராஹிம், ஷேக் அஜ்மல், அப்துல் மாலிக் ஆகிய நிர்வாகிகள் ஏக மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். அறந்தாங்கி நகரம், ஆவுடையார் கோவில் ஒன்றியம், ஆலங்குடி பேரூர், மணமேல்குடி ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர். பல்வேறு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

# சேலத்தில் டேங்கர் லாரி டிரைவர்கள் திடீர் வேலை நிறுத்தம் செய்து போராட்டம்.

சேலம். அக்.4–

சேலம் மாவட்டம் சங்ககிரி நாரணப்பன்சாவடி பகுதியில் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் (பிபிசிஎல்) நிறுவனத்திற்குச் சொந்தமான ஆயில் கிடங்கு முன்பு டேங்கர் லாரி ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களுக்கு நடைபெறும் பெட்ரோல் மற்றும் டீசல் விநியோகம் தற்போது முடங்கியுள்ளது.

இந்த ஆயில் கிடங்கில் இருந்து தினசரி சுமார் 100 டேங்கர் லாரிகள் மூலம் எரிபொருள் விநியோகம் செய்யப்படுகிறது. இந்த லாரிகளில் 12 ஆயிரம், 14 ஆயிரம், 20 ஆயிரம், 24 ஆயிரம் மற்றும் 25 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்டவை அடங்கும். இங்கு சுமார் 250 ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் பணியாற்றி வருகின்றனர்.





வெளிமாவட்டங்களில் இருந்து வரும் பல ஓட்டுநர்கள் இரவு நேரங்களில் தங்கள் வாகனங்களை கிடங்கு வளாகத்திலேயே நிறுத்திவிட்டு, அங்குள்ள ஓய்வறையில் தங்குவது வழக்கம். பின்னர் அதிகாலை எழுந்து லாரிகளில் எரிபொருளை ஏற்றிக்கொண்டு தங்கள் பணிக்குச் செல்வர். ஆனால் கடந்த சில நாட்களாக நிறுவன நிர்வாகம் தங்களை மனிதாபிமானத்துடன் நடத்தாமல் இழிவுபடுத்துவதாக ஓட்டுநர்கள் புகார் தெரிவித்து வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக நேற்று இரவு ஓய்வறையில் தூங்கிக்கொண்டிருந்த 30க்கும் மேற்பட்ட ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்களை அதிகாரிகள் அங்கிருந்து வெளியேற்றியதாகக் கூறப்படுகிறது. இதனால் மனமுடைந்த தொழிலாளர்கள் இன்று காலை வழக்கம்போல் லாரிகளில் எரிபொருளை ஏற்றாமல் திடீர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்கள் டேங்கர் லாரிகளை ஆயில் கிடங்கு முன்பு வரிசையாக நிறுத்தி தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவுகிறது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஓட்டுநர்கள், ‘எங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நிர்வாகம் செய்து கொடுக்க வேண்டும். அதிகாரிகள் எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய தீர்வு காண வேண்டும். அடிப்படை வசதிகள் உறுதிசெய்யப்பட்டால் மட்டுமே நாங்கள் மீண்டும் பணிக்குத் திரும்புவோம்‘ என உறுதியாகத் தெரிவித்தனர்.

இந்த போராட்டம் தொடர்ந்தால் அப்பகுதிகளில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளதால், நிர்வாகம் விரைவில் தலையிட்டு பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சேலம் மாவட்டம் சங்ககிரி நாரணப்பன்சாவடி பகுதியில் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் (பிபிசிஎல்) நிறுவனத்திற்குச் சொந்தமான ஆயில் கிடங்கு முன்பு டேங்கர் லாரி ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களுக்கு நடைபெறும் பெட்ரோல் மற்றும் டீசல் விநியோகம் தற்போது முடங்கியுள்ளது.

# மாணவர்கள், இளைஞர்களே அதிகம்; ஒரே வாரத்தில் 2 லட்சம் போக்குவரத்து விதிமீறல்: திணறும் போக்குவரத்து போலீசார்

சென்னை: சென்னையில் செப்டம்பர் முதல் வாரத்தில் மட்டும் 2 லட்சம் போக்குவரத்து விதிமீறல்கள் நடந்துள்ளன என்றும், பெரும்பாலும் மாணவர்களும், இளைஞர்களும்தான் இந்த விதிமீறல்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும் போக்குவரத்து போலீசார் தெரிவித்துள்ளனர். சென்னையில் வாகனங்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. குறைந்த முன்பணத்தில் இருசக்கர வாகனம், கார் வாங்குவது எளிதாக உள்ளதால் வாகனங்கள் இல்லாத வீடுகளே சென்னையில் இல்லை என்று கூறலாம். இதனால், முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசல் படிப்படியாக அதிகரித்துள்ளது. இதற்கிடையே போக்குவரத்து விதிமீறலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதல், சிக்னலை மதிக்காமல் செல்லுதல், ஒரு வழிப்பாதையில் விதிமீறி வாகனங்களை இயக்குதல், உரிய லைசென்ஸ், வாகன ஆவணங்கள் இல்லாமல் வாகனங்களை இயக்குதல்,சிறுவர்களை வைத்து வாகனத்தை இயக்குவது போன்ற விதிமீறல்கள் கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்துள்ளது.

குறிப்பாக, கடந்த செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் மட்டும் 2 லட்சம் போக்குவரத்து விதி மீறல்கள் நடந்துள்ளதாக போக்குவரத்து போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது. இதுகுறித்து போக்குவரத்து போலீஸ் அதிகாரி ஒருவர் கூறும்போது, ‘பள்ளி மாணவர்கள் அதிகளவில் பைக், மொபட்களை விதிமீறி இயக்குகின்றனர். இதற்கு பல பெற்றோர்களே உறுதுணையாக இருக்கின்றனர். கல்லூரி மாணவர்கள் ஒரே பைக்கில் 3 பேர் வீதம் செல்வதும், ஹெல்மெட் இல்லாமல் பைக் ஓட்டுவதும் அதிகரித்து காணப்படுகிறது. பல இருசக்கர வாகனங்களில் நம்பர் பிளேட் அழிந்து, துருப்பிடித்து எண்கள் கண்ணுக்கு தெரியாமல் உள்ளது. புதிய வாகனங்கள் நம்பர் பிளேட் இல்லாமல் வந்தால் அவற்றை சோதனை செய்யும்போது வாகனம் பதிவில் உள்ளது. விரைவில் நம்பர் பிளேட் வந்துவிடும் என்று கூறுகிறார்கள். குற்றச்செயலில் ஈடுபடுபவர்களும் நம்பர் பிளேட்டை மாற்றி தப்பி விடுகிறார்கள்.

இதுபோன்ற பிரச்னைகளை கையாள்வதில் பல சிக்கல்கள் உள்ளன. போக்குவரத்து சிக்னல்களில் உள்ள கேமராக்களின் உதவியுடன் சம்பந்தப்பட்ட வாகன ஓட்டுநருக்கு அபராதம் விதித்தாலும் அதை பெரும்பான்மையாவர்கள் கட்டுவதில்லை. இதுபோன்று விதிமீறல்களில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலும் இளைஞர்களும், மாணவர்களும்தான். விதி மீறலில் ஈடுபடுபவர்கள் காலை மற்றும் மாலையில் பீக் அவர்ஸ் என்று கூறப்படும் நெரிசல் நேரங்களில் தப்பி விடுகிறார்கள். இதை எப்படி கையாள்வது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இதற்குமேல் நோ பார்க்கிங் பகுதியில் வாகனங்களை நிறுத்திவிட்டு செல்வதும் அதிகரித்துள்ளது. சாலையில் நிறுத்தப்படும் விதிமீறும் வாகனங்களில் சரியான நம்பர் பிளேட் இல்லை என்றால் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்,’ என்றார்.

# வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்ட மற்றும் தகுதி வாய்ந்த இளைஞர்கள், புதிய வாக்காளர்களின் பெயர்களை பதிவு செய்ய சிறப்பு முகாம்கள் : மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தகவல் :

திருவள்ளூர் அக் 04 : இந்தியத் தேர்தல் ஆணையமானது தனது 29.09.2026ம் தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக, ”சிறப்புத் தீவிரத் திருத்தப்பணி” (SIR) ஏற்கனவே நிறைவடைந்த மாநிலங்கள்மற்றும்யூனியன் பிரதேசங்களில்பின்வரும்நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர் திருத்த நடைமுறையின் கீழ், விடுபட்ட வாக்காளர்கள் மற்றும் இளம்,முதல் முறையாக தகுதி பெறும் வாக்காளர்களை பதிவு செய்வதற்கான சிறப்பு முகாமினை தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் வாக்காளர் பதிவு அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். படிவம் 6 உடன் இணைக்கப்பட்டுள்ள ”உறுதிமொழிப் படிவம்” சிறப்புத் தீவிரத் திருத்தக் காலக்கட்டத்தில் மட்டுமே பயன்படுத்தப்படும். சிறப்புத் தீவிரத் திருத்தம் அல்லாத காலக்கட்டங்களில், ”வாக்காளர் பதிவு விதிகள் 1960” ன் படி பொருந்தக்கூடிய படிவங்கள் பயன்படுத்தப்படும்.

இது தொடர்பாக, ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, வாக்காளர் பட்டியலில்பெயர் விடுபட்ட மற்றும்தகுதி வாய்ந்த இளைஞர்கள்,முதல் முறை வாக்காளர்களின் பெயர்களை பதிவு செய்வதற்கு திருவள்ளூர் தேர்தல் மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தெரிவித்துள்ளார்.

# செஞ்சி கோட்டையில் தூய்மை இந்தியா தின விழா



விழுப்புரம் மாவட்டத்தில் வரலாற்று சிறப்புமிக்க செஞ்சிக்கோட்டையில் காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2 ஆம் நாள் தூய்மை தினமாக கொண்டாடப்பட்டது. செஞ்சி ராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் ஏழுமலை தலைமையில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களும் செஞ்சி ரோட்டரி கிளப் நிர்வாகிகளும் இணைந்து செஞ்சி கோட்டையில் அமைந்துள்ள வீர ஆஞ்சநேயர் கோயில் வளாகம் வெங்கட்ரமணர் திருக்கோயில் வளாகம் மற்றும் கோட்டையின் உட்பகுதி ஆகியவற்றை சுத்தப்படுத்தி தூய்மை பணி மேற்கொண்டனர். இந்நிகழ்வு பொதுமக்களிடையே குப்பையை தொட்டியில் போடுவோம், முடிந்தவரை பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் , வீட்டைப்போல் நாட்டையும் தூய்மையாக காப்போம் என்ற உணர்வை ஏற்படுத்தியது.

ஈரோட்டில் நடைபெற்றது. தமிழ்நாடு_ பாண்டிச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டமைப்பின் முப்பெரும் விழா..

# சட்டம் படித்த வழக்கறிஞர்களுக்கு சட்டப்படியான பாதுகாப்பு. சட்டத்துறை அமைச்சர் சி. டி. ஆர் நிர்மல் குமார் பேச்சு..

## மின்சாரம் குறித்த முதல் கேள்வி கேட்டதும் படை பரிவாரங்களுடன் விருட்டன வெளியே சென்ற துறை அமைச்சர்.. திகைத்துப் போய் நின்ற செய்தியாளர்கள்..





ஈரோடு. அக். 04

ஈரோட்டில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்கறிஞர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் எழுச்சி மாநாடு பொதுக்குழு கூட்டம் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா என முப்பெரும் விழா நேற்று நடைபெற்றது. இதில் சட்டத்துறை அமைச்சர் சி டி ஆர் நிர்மல் குமார் கலந்து கொண்டு பேசினார்.

ஈரோடு பெருந்துறை ரோடு மேட்டுக்கடை அருகே உள்ள ஸ்ரீ தங்கம் மஹாலில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்கறிஞர்களின் எழுச்சி மாநாடு, பொதுக்குழு கூட்டம், புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா என முப்பெரும் விழா நேற்று நடைபெற்றது.

இந்த முப்பெரும் விழாவிற்கு தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டமைப்பின் சேர்மன் கரூர் நா. மாரப்பன் தலைமை வகித்தார். சங்கத்தின் பொதுச்செயலாளர் ஆர். அய்யாவோ, சங்க நிர்வாகிகள் பி. கார்த்திகேயன், வி. எஸ் பஸ்வநாதன், வி. நாராயணகுமார், காளிதாஸ், இவர் முன்னிலை வகித்தனர்.

தி அட்வகேட்ஸ் அசோசியேஷன் ஈரோடு தலைவர் பி. பாலசுப்பிரமணியம் வரவேற்புரை ஆற்றினார்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் ஈரோடு தி அட்வகேட்ஸ் அசோசியேசன் இணைந்து நடத்திய வழக்கறிஞர்களின் இந்த முப்பெரும் விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தமிழ்நாடு மின்சாரம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி டி ஆர் நிர்மல் குமார் பேசினார்.

அப்போது அவரிடம் வழக்கறிஞர் சங்க நிர்வாகிகள் பல கோரிக்கைகளை முன் வைத்தனர்.

அதன் பின் பேசிய மின்சாரம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் சிடிஆர் நிர்மல் குமார் பேசும்போது...

இன்றைக்கு ஈரோட்டில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் ஈரோடு தி அட்வகேட்ஸ் அசோசியேசன் இணைந்து நடத்தும் இந்த முப்பெரும் விழா இன்றைய தினம் இங்கு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

வழக்கறிஞர்கள் சங்கங்களின் சார்பில் என்னிடம் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர்.

ஒரு ஜனநாயக நாட்டிற்கு சட்டம் என்பது மிக முக்கியமானது. அரசியல் சாசன சட்டம் இருப்பது போல் குற்றவியல் நடைமுறை சட்டம், சிவில் சட்டம் என்று பல சட்டங்கள் நம்முடைய நாட்டில் நடைமுறையில் உள்ளது.

எந்த ஒரு பிரச்சனைக்கும் தீர்வு என்பது நீதிமன்றங்களின் வாயிலாக மட்டுமே நாம் பெற்றுக் கொள்ள முடியும். அதுதான் நம்முடைய அரசியல் சட்ட அமைப்பு.

இங்கு வழக்கறிஞர் சங்கங்களின் நிர்வாகிகள் என்னிடம், சட்டம் படித்த எங்களுக்கு சட்டப்படியான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். எந்த இடத்திலும் சமூக விரோதிகளால் எங்களுடைய உடைமைக்கும் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் நிலை உள்ளது. அதோடு பாண்டிச்சேரி அரசு வழக்கறிஞர்களுக்கான சேமநல திட்ட நிதியினை கோரிக்கையின் அடிப்படையில் கூடுதலாகி கொடுத்துள்ளதாகவும் என்னிடம் அவர்கள் தெரிவித்தனர்.

அதேபோல் தமிழ்நாட்டிலும் வழக்கறிஞர்களுக்கு உரிய சேம நல நிதி மற்றும் மானியத்துடன் கூடிய கடன் உதவிகள், தமிழக அரசின் வீட்டு வசதி வாரியத்தில் சலுகை விலையில் வீடுகள் கிடைக்கும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முதல்வரிடம் எடுத்து சொல்லி செய்து தர கேட்டுள்ளார்கள்.

சட்டம் படித்த வழக்கறிஞர்களுக்கு உரிய சட்டப்படியான பாதுகாப்பு மற்றும் அவர்கள் கேட்டுள்ள அரசின் சலுகைகள் அனைத்தையும் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக் கூறி அவைகளை படிப்படியாக செய்து தர உறுதியான நடவடிக்கையை நான் எடுப்பேன்.

இவ்வாறுவழக்கறிஞர்களின் முப்பெரும் விழாவில் சட்டத்துறை அமைச்சர் சி டி ஆர் நிர்மல் குமார் பேசினார்.

கூட்டம் முடிந்ததும், கூட்ட மேடையை விட்டு கீழே இறங்கிய அமைச்சர் சி டி ஆர் நிர்மல் குமாரிடம் செய்தியாளர்கள் பேட்டி எடுக்க மைக்கை நீட்டியதும் சற்று திகைத்துப் போன அமைச்சர், செய்தியாளர்களின் முதல் கேள்வியான மின்சாரம் குறித்த கேள்வியை கேட்டதும் அதற்கு எந்த ஒரு பதிலையும் சொல்லாமல், முதல் கேள்வி மட்டும் கேட்ட நிலையில் அங்கிருந்து தனது படை பரிவாளங்களுடன் விரைந்து வெளியேறி தனது காரில் ஏறி பறந்து விட்டார்.

தவெக ஆட்சியில் முதல்வர் விஜய் செய்தியாளர்களை சந்திப்பதே இல்லை என்ற விலை இருந்து வரும் நிலையில், அமைச்சர்களும் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு உரிய பதிலை சொல்ல முடியாமல் கேள்விகளை தவிர்த்து விட்டு செய்தியாளர்களிடம் இருந்து தப்பித்தால் போதும் என்ற அடிப்படையில் அங்கிருந்து சென்று விடுகின்றனர்.

நேற்றைய நிகழ்ச்சியில் மின்துறை அமைச்சர் சிடிஆர் நிர்மல் குமாரிடம் தமிழகத்தில் மின் உற்பத்தி செய்யப்படுவது இல்லை, வெளி மாநிலங்களில் இருந்து தான் மின்சாரம் விலைக்கு வாங்கப்படுகிறது என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்றைய தினம் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசியுள்ளார் இதற்கு உங்கள் பதில் என்ன என்று செய்தியாளர்கள் கேட்ட முதல் கேள்விக்கு பதில் சொல்லாமல் செய்தியாளர்களை தவிர்த்து விட்டு அங்கிருந்து சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் சட்டென்று வெளியேறியது செய்தியாளர்களை திகைப்படைய செய்தது.

இதே போன்று தான் எந்த நிகழ்ச்சியிலும் செய்தியாளர்களை சந்திக்காமல் முடிந்தவரை செய்தியாளர்கள் சந்திப்பை ஈரோட்டைச் சேர்ந்த அமைச்சர் விஜய் பாலாஜியும் செய்து வருகிறார் என்பது இந்த நேரத்தில் குறிப்பிடத்தக்கது.

அதிமுக, திமுக ஆட்சி காலங்களில் அமைச்சர்களிடம் செய்தியாளர்கள் பல கோணங்களில் எந்த கேள்வி கேட்டாலும் அவற்றிற்கு பொறுமையான முறையில் உரிய பதிலை தருவார்கள்.

தமிழ்நாட்டின் அமைச்சராக இருக்கும் அமைச்சரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பி அவர் சொல்லும் பதிலை தொலைக்காட்சி, நாளிதழ்கள் வாயிலாக பொதுமக்களுக்கு தெரியப்படுத்தினால் தான் அரசு நிர்வாகத்தில் என்ன நடக்கின்றது என்று தெரிய வரும்.

ஆனால் தவெக ஆட்சியில் முதலமைச்சர் முதல் எந்த அமைச்சர்களும் செய்தியாளர்களை சந்திப்பதே இல்லை. அதனையும் மீறி செய்தியாளர்கள் மைக்கை நீட்டினால் அங்கிருந்து கிரேட் எஸ்கேப் ஆவதில் கை தேர்ந்தவர்களாக இன்றைய அமைச்சர்கள் உள்ளனர்.



கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை மற்றும் கோட்டூர் பகுதிகளில் நடப்பு கேஎம்எஸ் 2026–2027 சம்பா பருவத்திற்கான நேரடி கொள் முதல நிலையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் கிரியப்பனவர் செயல்பாடுகளை பார்வையிட்டார். உடன் பொள்ளாச்சி சார் ஆட்சியர் ராமகிருஷ்ணசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (முதுநிலை மண்டல மேலாளர்) தனப்பிரியா, வேளாண்மைத்துறை இணை இயக்குனர் தமிழ்செல்வி , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஆனந்தகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# நெடுங்கல் ஸ்ரீ சென்றாய பெருமாள் கோயிலில் தேனீக்கள் தாக்குதல் 100க்கும் மேற்பட்ட பக்தர்கள் அவதி



கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அருகே உள்ள நெடுங்கல் ஊராட்சியில், மலை மீது புகழ்பெற்ற ஸ்ரீ சென்றாய பெருமாள் கோயில் அமைந்துள்ளது. புரட்டாசி மாதத்தின் 3வது சனிக்கிழமையான இன்று அதிகாலை முதலே 500க்கும் மேற்பட்ட பக்தர்கள் மலை ஏறி சுவாமி தரிசனம் செய்து வந்தனர்.

மதியம் சுமார் 1 மணி அளவில், பக்தர்கள் திரளாக மலைப்பாதையில் ஏறிச் சென்று கொண்டிருந்தபோது, அங்கிருந்த மரத்தில் இருந்த தேன் கூடு திடீரென கலைந்தது. இதையடுத்து தேனீக்கள் பக்தர்களை நோக்கி பறந்து வந்து கடிக்கத் தொடங்கின.

எதிர்பாராத தேனீக்கள் தாக்குதலால் அதிர்ச்சியடைந்த பக்தர்கள் அலறியடித்துக் கொண்டு அங்கும் இங்குமாக ஓடினர். இதில் 100க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு தேனீக்கடி ஏற்பட்டதாக கூறப்படுகிறது. சிலர் சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்தனர்.

தகவலறிந்த கிருஷ்ணகிரி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, மலையின் மேல் பகுதியில் சிக்கித் தவித்த பக்தர்களை பாதுகாப்பாக கீழே அழைத்து வந்தனர்.

மேலும், காயமடைந்த பக்தர்களை மீட்பதற்காக 108 ஆம்புலன்ஸ் வாகனங்கள் வரவழைக்கப்பட்டன. பாதிக்கப்பட்டவர்கள் 108 ஆம்புலன்ஸ் மற்றும் உறவினர்களின் இருசக்கர வாகனங்கள் மூலம் நெடுங்கல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

புரட்டாசி சனிக்கிழமையன்று கோயில் வழிபாட்டின்போது நடைபெற்ற தேனீக்கள் தாக்குதல் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு, 3 நாட்களுக்கு டாஸ்மாக் கடைகள் மூடல்!

மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு, இன்று (அக்டோபர் 4) முதல் 3 நாட்களுக்கு டாஸ்மாக் கடைகளை மூட செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் வீரப்பன் உத்தரவிட்டுள்ளார். வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கையை முன்னிட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# கொடைக்கானலில் குவிந்த சுற்றுலா பயணிகள்!!

கொடைக்கானல்: அக்.4–

தொடர் விடுமுறையால் கொடைக்கானலில் குவிந்த சுற்றுலா பயணிகளால் மலைச்சாலையில் 5 கிலோ மீட்டர் தொலைவிற்கு வாக்கங்கள் அணிவகுத்து செல்கின்றனர் கொடைக்கானலில் விடுமுறை நாட்கள் காரணமாக அதிகளவில் சுற்றுலா பயணிகள் குவிந்திருக்கின்றன, இதன் காரணமாக 2வது நாளாக இன்றும் கடுமையான நெரிசல் ஏற்படுத்திருக்கிறது.

காலாண்டு தேர்வு விடுமுறை மற்றும் வாரவிடுமுறையை முன்னிட்டு சுற்றுலா பயணிகளின் வருகை நேற்று முதலே திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் அதிகரித்து காணப்படுகிறது. குறிப்பாக தமிழகம் மட்டுமின்றி கேரளா, கர்நாடக, ஆந்திரா, புதுச்சேரி போன்ற வெளிமாநில சுற்றுலா பயணிகளின் வருகையானது தற்பொழுது வரை அதிகளவில் உள்ளது. இதனால் உகார்த்தே நகர், சீனிவாசபுரம், மூஞ்சிக்கல், ஏரிக்கரை, அப்சர்வேடிரை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் பிரதான மலைச்சாலைகளிலும் சுமார் 5கிலோ மீட்டர் தூரத்திற்கு மேலாக நீண்ட வரிசையில் அணிவகுத்து காத்திருக்கின்றனர்,

இதனால் சுற்றலா பயணிகள் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் தாங்கள் செல்லவேண்டிய இடத்திற்கு உரிய நேரத்திற்கு செல்ல முடியாமல் பெரும் அவதியடைந்து வருகின்றனர். இதனை மாவட்ட நிர்வாகம் கவனம் செலுத்தி கொடைக்கானல் மலைச்சாலையை அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கவும் அதேபோல மாற்றுச் சாலை அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேன்படுத்தி தரவும் அதே போல மலைச்சாலையில் சாலையோரத்தில் இருக்கக்கூடிய வாகனங்கள் மற்றும் ஆக்கிரமிப்புக்களை அகற்ற வேண்டும் என சுற்றலா பயணிகள் மற்றும் உள்ளூர் பொது மக்கள் பெரிதும் வேண்டுகோள் விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## எஸ்ஐஆர் விவகாரம்: தலைமைத் தேர்தல் ஆணையரை கண்டித்து அக்டோபர் 15ல் இந்தியா கூட்டணி கண்டன ஆர்ப்பாட்டம்

சென்னை: எஸ்ஐஆர் விவகாரத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை கண்டித்து அக்.15ம் தேதி INDIA கூட்டணி கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் நடைபெற்ற INDIA கூட்டணி கட்சிகள் ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் பேட்டி அளித்துள்ளார்

# பொது அறிவிப்பு

வருவாய் கோட்டாசியர் அவர்கள்
ஸ்ரீரங்கம் திருச்சி மாவட்டம்.

நாள்: 12.05.2025 ஒ.மு.அ.3/800/2024

திரு தத்தாநாயக்கர்
த/பெ வெள்ளைய நாயக்கர்
போத்த நாயக்கனூர்
வையம்பட்டி கிராமம்
மணப்பாறை வட்டம்
திருச்சி மாவட்டம்

.....மனுதாரர்.

வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
ஸ்ரீரங்கம்

.....எதிர் மனுதாரர்.

திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம் வையம்பட்டி கிராமம் போத்தநாயக்கனூரைச் சேர்ந்த தத்தா நாயக்கர் என்பவரது தந்தை வெள்ளையநாயக்கர் என்பவர் போத்த நாயக்கனூர் வையம்பட்டி கிராமம் மணப்பாறை வட்டம் திருச்சி மாவட்டம் மேற்படி விலாசத்தில் கடந்த 15.10. 2014 அன்று இயற்கை எய்திவிட்டார். மேற்படியாரின் இறப்பை அறியாமையின் காரணமாக பதிவு செய்யாமல் விடுபட்டு விட்டார் எனவே மேற்படி மனுதாரர் கால தாமதக் கட்டணத்துடன் இறப்பு சான்று பதிவு செய்து தர வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்துள்ளார். இம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் இந்த அறிவிப்பு பிரதி வெளியான 15நாட்களுக்குள் கனம் வருவாய் கோட்டாட்சியர் முன்பு நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர்

# புரட்டாசி மாதம் 3 ஆம் சனிக்கிழமை சிறப்பு பூஜைகள்..!



வந்தவாசி, அக் 04:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீ பாண்டுரங்கன் ருக்மாயி திருக்கோயிலில் நேற்று புரட்டாசி மூன்றாவது சனிக்கிழமை முன்னிட்டு மூல மூர்த்திகள் திருப்பதி ஏழுமலையான் தரிசனதத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். மேலும் இரவு வெள்ளி கருடன் மீது உற்சவ மூர்த்தி அமர்ந்த நிலையில் மேளதாளத்துடன் வாண வேடிக்கையுடன் கோவில் பிரகாரத்தில் வீதியுலா நடைபெற்றது.

அதேபோல் வந்தவாசி பெரிய காலனி பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ கலியுக வரத ஸ்ரீநிவாசப் பெருமாள் கோவிலில் மூல மூர்த்திகளுக்கு விசேஷ பூஜைகள் நடைபெற்றன. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421, 9750589992